# உளச்சார்பு & நுண்ணறிவு

சி.நவநீதன்(SLEAS)

❖ **பின்வரும் சொற்சோடிகள் இரண்டும் ஒத்த தொடர்பை காட்டுமாறு வெற்றிடத்தில் வரவேண்டிய சொற்களை குறிக்கும் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக**

1) துப்பாக்கி :............. :: .................:பரீட் சை

1.யுத்தம், வினாத்தாள் 2.போர், பேனை
3.மரணம், கல்வி 4.வெற்றி ,சித்தி (...)

2) கல்வியியற் கல்லூரி :கல்வியியலாளர் :: ............................:....................................

1.பாடசாலை, ஆசிரிய உதவியாளர் 2.பாடசாலை, அதிபர்
3.பல்கலைக்கழகம், விரிவுரையாளர் 4.விகாரை, விகாராதிபதி (,,,)

3) இலங்கை:...................... :: ...............: ரங்கூன்

1.ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, மியன்மார் 2.கொழும்பு. பர்மா
3.சிகிரியா, மியன்மார் 4.ஆசியா, ஆபிரிக்கா (.....)

4) இருபதுமுகி:.................... :: பன்னிருமுகி:....................................

1.முக்கோணி, ஐங்கோணி 2.சதுரம்,முக்கோணி
3.செவ்வகம், சதுரம் 4.வட்டம்,சதுரமுகி (.....)

5) .......................... :நோயாளி :: சிறைச்சாலை: ..........................................

1.வைத்தியசாலை, கைதி 2.வைத்தியர்,கைதி
3.தாதி,காவலர் 4.தாதி,பொலிஸ் (.....)

❖ **6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு கீழுள்ள தரவுகளினடிப்படையில் விடையை தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக,**

- A,B,C,D,E,F என்ற 6 நண்பர்களில் இருவர் தமிழ் பாடத்தையும் இருவர் கணிதபாடத்தையும் ஒருவர் சித்திர பாடத்தையும் மற்றையவர் நடனபாடத்தையும் கற்பிக்கின்றனர்
- நடனம் கற்பிக்கும் A கணிதம் கற்பிக்கும் D யை திருமணம் முடித்திருக்கிறார்
- ஒரே பாடத்தை கற்பிக்கும் B,F இல் B மணம் செய்திருப்பது சித்திர பாட ஆசிரியரையாகும்.
- C உட்பட நால்வர் திருமணம் செய்தவர்களாக உள்ள அதேவேளை குழுவில் இரு பெண்கள் மட்டுமே இருப்பதோடு அவர்கள் ஒவ்வொருவரும் கற்பிக்கும் பாடத்தை கற்பிக்கும் வேறெவரும் அக்குழுவில் இல்லை

6) கணிதபாடத்தை கற்பிப்பவர் இவர்களுள் யார் ?

1. B 2. C 3. E 4. F (……)

7) இவர்களுள் திருமணமான ஆண் யார் ?

1. B 2. C 3. A 4. E (……)

8) இக்குழுவிலுள்ள இரு பெண்களும் யார்?

1. A 2. B 3. D 4. E (……)

9) இவர்களுள் திருமணமான பெண் யார்?

1. B 2. A 3. D 4. E (…….)

10) பின்வரும் கூற்றுக்களில் நிச்சயமாக பிழையான கூற்று

1. திருமணமாகாத பெண்கள் எவருமிலர்
2. திருமணம் புரிந்த ஆண்கள் B,D
3. D திருமணம் புரிந்த ஆண்
4. B,F திருமணமான சோடிகள் (……)

❖ **11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு கீழுள்ள தேவை அடிப்படையாக கொண்டு விடையளிக்க**

- தேசிய கல்வி நிறுவகத்தின் வாண்மைத்துவ கற்கைநெறியொன்றின் இறுதிப்பரீட்சை வாரநாட்களில் கீழுள்ள ஒழுங்கில் நடத்த தீர்மானிக்கப்பட்ட்து.பாடநெறியில் கல்வி நிர்வாகம்,கல்வி சமூகவியல்,கல்வி தொழினுட்பம் ,கல்வி தத்துவம் ,கல்வி உளவியல் ஆகிய பாடங்களை கொண்டிருந்தது.
- வாரத்தில் மூன்று நாட்கள் காலையிலும் இரு நாட்கள் மாலையிலும் பரீட்சை நடத்தப்படுவதுடன் அடுத்துவரும் இருநாட்கள் காலைவேளை பரீட்சை நடத்தப்படவும் மாட்டாது
- கல்வி நிர்வாகம்,கல்வி சமூகவியல்,கல்வி தொழினுட்பம் ஆகிய பாடபரீட்சைகள் அடுத்துவருமாறு நடத்தப்படுவதுடன் கல்வி தொழினுட்ப பரீட்சை கல்வி நிர்வாகம்,கல்வி சமூகவியல் பாடங்களுக்கு பின்னரே நடத்தப்படும்.
- கல்வி நிர்வாகம், கல்வி சமூகவியல் பாட பரீட்சைக்கு முன்னர் கல்வி தத்துவம் பரீட்சை நடத்தப்பட வேண்டும்
- கல்வி நிர்வாகம்,கல்வி தத்துவம் பாட பரீட்சைகளுக்கிடையே வேறெந்த பரீட்சையும் நடத்தப்பட முடியாது

11) கல்வி தத்துவ பரீட்சை காலைவேளை நடத்தப்பட வேண்டுமாயின் கல்வி சமூகவியல் பரீட்சை எப்போது நடத்தப்பட வேண்டும்?

1.செவ்வாய் 2. புதன் 3.வியாழன் 4. வெள்ளி (....)

12) கல்வி சமூகவியல் பரீட்சை மாலைவேளை நடத்தப்பட வேண்டுமாயின் கல்வி உளவியல் பரீட்சை எப்போது நடத்தப்பட வேண்டும்

1.செவ்வாய் 2.வியாழன் 3.வெள்ளி 4. திங்கள் (....)

13) கல்வி தொழினுட்பம் பரீட்சை காலைவேளை நடத்தப்பட வேண்டுமாயின் காலைவேளை நடத்தப்படும் மற்றைய இரு பரீட்சைகளும் எவை ?

1. கல்வி நிர்வாகம், ,கல்வி உளவியல்
2. கல்வி தத்துவம், கல்வி உளவியல்
3. கல்வி நிர்வாகம், கல்வி சமூகவியல்
4. கல்விசமூகவியல், கல்வி தத்துவம் (....)

14) கல்வி நிர்வாகம் பரீட்சை காலைவேளை நடத்தப்பட வேண்டுமாயின் மாலைவேளை நடத்தப்படும் மற்றைய இரு பரீட்சைகளும் எவை ?

1. கல்விசமூகவியல், , கல்வி தத்துவம்
2. கல்வி தத்துவம், கல்வி உளவியல்
3. கல்வி தொழினுட்பம், கல்வி சமூகவியல்
4. கல்விசமூகவியல், கல்வி உளவியல் (.....)

15) நிச்சயமாக காலைவேளை நடைபெறும் பரீட்சை எது?

1. கல்வி தத்துவம் 2. கல்வி உளவியல்
3. கல்வி நிர்வாகம் 4. கல்வி தொழினுட்பம் (....)

❖ **16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு மிகச்சரியான விடையை தெரிந்து அவ்விடைக்குரிய இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக**.

16) 31 நாட்களை கொண்ட மாதமொன்றில் உள்ளடங்கமுடியாத திகதி

1/ஞாயிறு 17 2.செவ்வாய் 26 3.புதன் 10 4.வெள்ளி 1 (.....)

17) சரியான விடையொன்றிற்கு 5 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் அதேவேளை பிழையான விடையொன்றிற்கு 3 புள்ளிகள் குறைக்கப்படும் 50 வினாக்களை கொண்ட பரீட்சையொன்றில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க ஒருவருக்கு 170 புள்ளிகள் கிடைத்தால் அவர் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடையளித்திருப்பார்

1) 34 2) 85 3) 10 4) 40 (......)

18) கூற்று 1 - எல்லா மனிதர்களும் கருணையுள்ளம் படைத்தவர்கள்

கூற்று 2 - கருணையுள்ளம் படைத்தவர்கள் எவரும் உலோபிகளல்லர்

மேற்படி கூற்றுக்களினடிப்படையில் மிகச்சரியான முடிவு

1.மனிதர்கள் எல்லோரும் உலோபிகள்

2.கருணையுள்ளம்படைத்த அனைவரும் மனிதர்கள்

3.மனிதர்கள் எவருமே உலோபிகளல்லர்

4.எல்லா உலோபிகளும் மனிதர்கள் (....)

19) 100m இடைத்தூரத்திலிருக்குமாறு அடுத்தடுத்து அமைந்துள்ள மின்கம்பங்களை 48km/h கதியில் செல்லும் புகையிரதம் கடக்கின்றது .ஒரு நிமிடத்தில் எத்தனை மின்கம்பங்களை கடந்திருக்கும்?

1) 8 2) 9 3) 7 4) 48 (.......)

20) அடுத்தடுத்து 20%,10% வரி விதிக்கப்பட்டால் பொருளின் பெறுமதி எத்தனை வீதத்தால் உயர்ந்திருக்கும்?

1) 30% 2) 25% 3) 32% 4) 2% (.......)

21) A,B,C,D,E ஆகிய ஐவரும் அடுத்துள்ள 5 ஆசனங்களில் எத்தனை விதமாக அமரலாம்?

1)121 2) 120 3) 90 4) 5 (......)

22) " >" என்பது சமன் என்பதையும்

"×" என்பது சிறிது கூடுதலானது என்பதையும்

"=" என்பது குறைவானது என்பதையும் குறித்தால்

A×B ,B=C எனின் சரியான முடிவு

1)A<C 2)A=C 3)A>C 4)C<A (....)

23) தொட்டியொன்றை ஒரு குழாய் 15 நிமிடத்திலும் மற்றொரு குழாய் 24 நிமிடத்திலும் நிரப்பக்கூடியது.இவ்விரு குழாயினூடாக நீர் திறந்துவிடப்படும் அதேவேளை தொட்டியின் அடியிலுள்ள குழாயினால் நிமிடத்துக்கு 5 லீற்றர் நீர் வெளியேற்றப்படுமாயின் எவ்வளவு நேரத்தில் தொட்டி நிரம்பும்?

1)15நிமிடங்கள் 2)1 மணித்தியாலம் 3)39நிமிடங்கள் 4)10 நிமிடங்கள் (....)

24) 2,7,0,4,6 ஆகிய இலக்கங்களை ஒருதடவை மாத்திரம் பயன்படுத்தி எழுதக்கூடிய மூன்றால் மீதியின்றி வகுப்படக்கூடிய நான்கிலக்க எண்கள் எத்தனை?

1)96 2)36 3)120 4)60 (......)

25) தந்தையினதும் தாயினதும் வயதுகளுக்கிடையிலான விகிதம் 5:4 ஆகும் 8 ஆண்டுகளின் பின் அவர்களின் வயதுகளுக்கிடையிலான விகிதம் 6:5 ஆக இருக்குமெனில் தாயின் தற்போதைய வயது யாது?

1)40 2)32 3)48 4)44 (.....)

❖**26 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக**

26) 47056 என்ற எண்ணிலுள்ள இலக்கங்களை தனித்தனியாக்கி 70 000 இலும் சிறிய ஐந்திலக்க ஐந்தால் வகுப்படக்கூடிய எத்தனை எண்களை ஆக்கலாம் ? (.....)


27) 5 ஆண்களும் 4 பெண்களுமுள்ள குழுவொன்றிலிருந்து குறைந்தது ஒரு பெண்ணாவது உள்ளடங்கக்கூடியவாறு நான்குபேரைக்கொண்ட குழுக்கள் எத்தனை அமைக்கலாம் ? (....)

28) 23 பேரின் இடைநிறை 49kg மேலும் இருவர் சேர்ந்தால் இடை நிறை 4 kg ஆள் அதிகரித்ததெனின் புதிதாக சேர்ந்தோரின் நிறையை காண்க (....)

29) 72km/h கதியில் செல்லும் 75 m நீளமான புகையிரதம் அதே நீளமுடைய மேடையை முற்றாக கடப்பதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு ? (...)

30) புத்தகமொன்றை திறக்கும்போது வலதுபக்கத்தில் ஒற்றையெண் இடப்பட்டிருந்தது .31 ம் பக்கத்திலிருந்து 50 ம் பக்கம்வரை வாசிப்பதற்கு அவர் எத்தனை தாள்களை புரட்டியிருப்பார் ? (....)

31) ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு வர்ணம் தீட்டப்பட்ட சிறிய தாயக்கட்டைகளை படத்திலுள்ளவாறு அடுக்கி ஒட்டொய பின்னர் பார்வையிட்டால் குறைந்தது மூன்று வர்ணங்களையாவது அவதானிக்க முடிவது எத்தனை தாயக்கட்டைகளிலாகும் (......)



32) சித்திராவை அகிலன் "இவரது தந்தையினது தாயின் மகள் திருமணம் செய்திருப்பது எனது தந்தையினது ஒரே ஒரு மகனையாகும் " என்று அறிமுகப்படுத்தினால் சித்திரா அகிலனுக்கு என்ன உறவு முறையாவார் ? (......)

33) உயரத்தின்படி ஏறுவரிசையில் நிற்கும் போது A என்பவர் முன்னுக்கிருந்து 9 ஆவதாகவும், B பின்னுக்கிருந்து 17 ஆவதாகவும் நிற்கின்றார் .A,B ற்கிடையில் 6 பேர் நின்றால் அவ்வரிசையில் நிற்கக்கூடிய மனிதர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை யாது? (...)

34) ரவி காலை வேளையில் பாடசாலையை நோக்கி நடக்கும் போது தனது நிழலை பார்க்கமுடியவில்லையே எனக்கவலைப்பட்டான் .அச்சந்தர்ப்பத்தில் அவனது பாடசாலை வீட்டிலிருந்து எத்திசையில் அமைந்திருக்கும் (.....)

35) 25 அடி உயரமான கம்பமொன்றில் 4 நாட்களில் 5 அடி ஏறும் நத்தையொன்று அடுத்த இரு நாட்களில் 3 அடி சறுக்குகின்றது எனின் எத்தனையாவது நாள் உச்சியை தொடும்(...)

❖35 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள இரகசிய குறியீட்டிடை நன்கு அவதானித்து விடையளிக்க.இரகசிய குறியீட்டிலுள்ள இலக்கங்கள் எழுத்து ஒழுங்கில் எழுதப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்க .

| | | |
|---|---|---|
| FILLER=942527 | FACT=6304 | LATTICE=2936530 |
| FAILURE=5924786 | ISLE=5129 | |

36) **CARICATURE** என்ற ஆங்கில சொல்லை குறிக்கும் இரகசிய குறியீடு எது

1. 0675063879 2. 7903687270 3. 7906387279 4. 1378038729 (...)

37) **STRUCTURE** என்ற ஆங்கில சொல்லை குறிக்கும் இரகசிய குறியீடு எது

1. 387287310 2. 037813278 3. 137803879 4. 275609871 (....)

38) **CREATE** என்ற ஆங்கில சொல்லை குறிக்கும் இரகசிய குறியீடு எது

1. 079639 2. 623027 3. 751236 4 .823720 (.....)

39) **2633509** என்ற இரகசிய குறியீட்டினால் குறிக்கப்படும் ஆங்கில சொல் எது


1.FAILURE 2.CREATES 3.LATTICE 4.STATUTE (.....)

40) **4529** என்ற இரகசிய குறியீட்டினால் குறிக்கப்படும் ஆங்கில சொல் எது

1.TACT 2.FATE 3.TILE 4.FILE (.........)


❖ **பின்வரும் எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை அருகிலுள்ள அடைப்பினுள் எழுதுக**

**41)**





(.......)

**42)**





(.....)

43)





(……)

44)





(……)


45)





(…)

❖ உருவமொன்று குறிப்பிட்ட இரு பாதைகளினுடாக உள்நுழைந்து வெளியேறும்போது ஏற்படும் மாற்றத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை குறிக்கும் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக





46)  என்ற உரு பாதை A யினுடாக உள்நுழைந்து வெளியேறும்போது தோற்றமளிக்கும் சரியான வடிவம்





(…….)

47)  என்ற உரு பாதை B யினுடாக உள்நுழைந்து வெளியேறும்போது தோற்றமளிக்கும் சரியான வடிவம்




A B C D (.....)

48) பாதை B யினுடாக வெளியேறும்போது  என்ற வடிவில் தோற்றமளித்தால் உள்நுழைந்த வடிவம் யாதாக இருக்கலாம்



(.....)

49) 


மேற்படி உருவம் இருதடவைகள் படத்திலுள்ளவாறு பாதை B யினூடு நுழைந்தால் வெளியேறும்போது பெறப்படும் வடிவம்



A B C D (.......)

50)  படத்திலுள்ளவாறு பாதை B யினூடு வெளியேறினால் எத்தனை தடவை உள்நுழைந்திருக்கும்

(.....)

A. 1 B. 2 C. 3 D. 4

வேகம் + விவேகம் = வெற்றி